[1974 சனவரி 28

திரு. என், கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது பி.ஏ. முடித்து விட்டு, எம்.ஏ. படிக்க வேண்டுமானால், உயர்நிலைப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்குமட்டும்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது. துவக்க பள்ளி, உயர்துவக்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு அத் தகைய அனுமதி அளிப்பதில்லை. ஆகவே, ஆசிரியர்கள் எந்தப் பள்ளியில் பணி புரிந்தாலும், அவர்கள் பி. ஏ. பாஸ் செய்திருந்தால் எம்.ஏ. படிக்க அனுமதியளிக்க அரசு ஆவன செய்யுமா?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட தடை எதும் இல்லை என்று குறிப்பிட்டேன். இப்பொழுது பி.ஏ. பட்டத் தேர்வுகளுக்கு எப்படி அனுமதிக்கப்படுகிறதோ அதேமாதிரித்தான் எம்.ஏ. பட்டத் தேர்வுக்கும் அனுமதி அளிக்கப்படு கிறது. இவைகளிலே எந்தத் தடையும் இப்பொழுது விதிக்கப்பட வில்லை. சென்னை பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம் ஆகிய வற்றில் அப்படிப் படித்து எழுத வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது ரெசிடென்சியல் யூனிவர்சிடியாக இருப்பதால், அங்கே எம்.ஏ. பி.ஏ., பட்டப் படிப்பு பெறுகிறவர்கள் அங்கே சேர்ந்து படிக்க வேண்டும். அந்த பல்கலைக் கழகம்தான் அப்படி வைத்திருக்கிறது. மற்ற இரண்டு பல்கலைக் கழகங்களிலும் இப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தேர்வு எழுதலாம். துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பொழுது அந்தத் தடை எதும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அரிசன நல இலாக்கா வின் மூலம் நடத்தப்படும் நடுநிலை பள்ளிகளுக்கு எம்.ஏ. பட்டதாரி, பி.ஏ. பட்டதாரி போன்றவர்களை தலைமையாசிரியர்களாக நியமித்துப் பணியாற்றச் செய்யும் சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பொதுவாகவே, உயர்துவக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக பி.ஏ. பி.டி. படித்தவர்களை நியமிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு இப்பொழுது மெல்ல மெல்ல அதற்காக எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக் கிறது. அந்த வகையில் அரிசன நலப் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, தனியார் பள்ளி ஆகிய எல்லாவற்றிலும் அந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எல்லா உயர்துவக்கப்பள்ளிகளிலும் தலைமையாசிரியர்கள் பி.ஏ. பி.டி. படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப் படையாக வைத்துத்தான் ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட அளவு எண் ணிக்கையை அரசாங்கம் தந்துவருகிறது.

கன்னிகைப்பேர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*183 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி- சுற்று லாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம் கன்னிகைப்பேர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் குரிய கட்டடம் கட்டித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1974 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டு சில ஆண்டுகளாகியும் பள்ளிக் கட்டடம் இல்லாமல், இன்னும் மாணவர்கள் மரத்தடியில் படித்து வருகிறார்கள். ஆகவே, பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கி, ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த ஒரு உயர்நிலைப் பள்ளியானாலும், அதற்காக ஐந்து ஏக்கரா நிலம் தரவேண்டும். பத்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கட்டடத்திற்காக ரூ. 12,500 தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால், எங்களிடத்திலிருந்து அனுமதி பெறும்போது, "நாங்கள் எப்படியும் கட்டடம் கட்டிவிடுகிறோம், அனுமதி தாருங்கள்" என்று கேட்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதி தந்திருந்தால் இப்படிப்பட்ட சங்கடங்களுக்கு இடம் ஏற்படாது. ஆனால், அந்த இடத்திலுள்ளவர்கள் 12,500 ரூபாய் கட்டட நிதியாகத் திரட்டித் தருவதாகச் சொன்ன தொகை இன்னும் கட்டப்படவில்லை. ஆகவே, அதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தின் அளவில் ஒரு பங்கோ அல்லது இரண்டு பங்கோ கூட செலுத்தி, கட்டடங்களைக் கட்டும் முயற்சியை மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியின் மூலமாக மேற்கொள்ளலாம்.

மாயூரம் நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள்

*184 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972–73–ஆம் ஆண்டில், மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிகள் கட்டிக்கொள்வதற்கென அரசு வழங்கிய கடன் மற்றும் மானியத்தொகை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972–73–ஆம் ஆண்டில் மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிக் கட்டிக் கொள்வதற்கென கடன் மற்றும் மானியத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

Islamic contribution for Tamil

* 185 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to conduct any research into the Islamic contribution for Tamil in this State; and

(*b*) if so, the details thereof?